O.S.No. 30/2019 நாள் 17.04.2026 PW 1 – திரு. ஜெயராமன்

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (6 முதல் 13 பிரதிவாதிகள்தரப்பில்)

நான் வேப்பலோடை சால்ட் கார்பரேசனில் வேலை பார்த்தேன் என்றால் கணக்குபிள்ளையாக இருந்தேன். எனக்கு வழக்கு விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கு எதற்காக போட்டுள்ளோம் என்றால் 1985 ஆம் ஆண்டு ஒரு இடம் வாங்கினோம். அதற்காக கிரையமும், பட்டாவும் வாங்கியுள்ளோம். தற்பொழுது ராமர் என்பவர் எங்கள் சொத்து என்று சொல்லி கூட்டுபட்டாவில் சேர்த்து கொண்டார். எந்த வருடம் சேர்த்தார் என்றால் தற்போது 2 வருடங்களுக்கு முன்பு. 2 வருடங்களுக்கு முன்பு பட்டா யார் பெயரில் இருந்தது என்றால் வேப்பலோடை சால்ட் கார்பரேசன் பெயரில் இருந்தது. அதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா எண். 3328 தாக்கல் செய்துள்ளேன். இந்த பட்டா எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்றால் 1985 ஆம் ஆண்டு கிரையம் வாங்கும்போதே பட்டாவும் வாங்கிவிட்டோம். 1985 க்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் தெரியவில்லை. நாங்கள் கிரையம் வாங்கிய முன்கிரையதாரர் பெயரில் பட்டா இல்லாததால் அதை மறைத்து தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–40 ஆன பட்டா எண். 5862 ன்படி 9 பிரதிவாதிகள் பெயரும், 10 வதாகத்தான் எங்கள் பெயர் உள்ளது என்றால் எனக்கு அறிவிப்பு கொடுக்காமல் அவர்களது பெயரை சேர்த்துவிட்டார்கள். வேப்பலோடை சால்ட் கார்பரேசன் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளோம். அது நீதிமன்றத்தில் மிஸ்ஸாகிவிட்டது என்று கூறினார்கள். அதுசம்மந்தமாக எழுத்துமூலமாக புகார் கொடுக்கப்பட்டதா என்றால்

வாய்மொழியாக சொன்னோம். நான் தாக்கல் செய்யாமலேயே தாக்கல் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பட்டா என்னிடம் உள்ளது, தாக்கல் செய்கிறேன். நாங்கள் சொத்தை யாரிடம் வாங்கினோம் என்றால் நல்லக்கண்ணு கோனார் என்பவரிடம் வாங்கினோம். ஆவண எண் என்னவென்றால் 1441/1985 ஆகும். அந்த நல்லகண்ணு கோனாருக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதைக்காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது அவரது மனைவியின் சொத்து அதனுடைய பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் நல்லகண்ணு கோனாருக்கு எப்படி சொத்து வந்தது என்று சொல்லியுள்ளாரா என்றால் அவரது பூர்வீக சொத்து என்று சொல்லியுள்ளார். பூர்வீக சொத்து என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. பாகப்பிரிவினை பத்திரத்தில் பூர்வீக சொத்து என்று சொல்லப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் ரீ செட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண். 1319/4ல் கண்ட சொத்து பட்டா எண். 593ல் சுடலைகோன் என்பவர் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான் மேற்படி ஆவணம் **பி.வா.சா.ஆ–1** ஆக குறியீடுசெய்யப்படுகிறது. ரீ செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சுடலைகோனுக்கும், நாங்கள் கிரையம் வாங்கியுள்ள நல்லக்கண்ணுவிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் அது பற்றி தெரியாது. தூண்டில் கோனார் மற்றும் ஏகாந்தி அம்மாள் ஆகியோர்கள் சுடலைகோனார் மகன் பிச்சைக்கோனாரிடமிருந்து ஆவண எண். 1157/1931 24.09.1931 தேதியில் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலம் சர்வே எண். 1319/4 சொத்தை 1 ஏக்கர் 44 செண்ட் இடத்தை கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் அது பற்றி தெரியாது, நாங்கள் கிரையம் வாங்கும்போது வில்லங்கம் போட்டு பார்த்தோம், அதில்

வரவில்லை. எங்கள்தரப்பில் வில்லங்கம் எந்த வருடத்திலிருந்து போட்டார்கள் என்றால் ஞாபகமில்லை. நாங்கள் இந்த வழக்கில் வில்லங்க சான்றிதழ் நிறைய தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.